بسم الله الرحمن الرحيم

# Leadership and Responsibility in Islam – Lessons from the Sahabah



His Eminence



## SHEIKH. ABDUL QUDDOOS AZHARI

Founder and Chairman
Qalam Group of Institutions, India
Australian International Islamic Colleges, Australia

## Delivered at New College, Chennai, India on 9th January 2026

MY LORD! INCREASE ME IN KNOWLEDGE

QALAM GROUP OF INSTITUTION

AUSTRALIAN INTERNATIONAL ISLAMIC COLLEGE

**بسم الله الرحمن الرحيم**

**Khutbah Title:**

**Leadership and Responsibility in Islam – Lessons from the Sahabah**

**الحمد لله، نحمده ونستعينه ونستغفره، ونعوذ بالله من شرور أنفسنا ومن سيئات أعمالنا، من يهده الله فلا مضل له، ومن يضلل فلا هادي له. وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له، وأشهد أن محمداً عبده ورسوله.**

**يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ**

**أما بعد:**

**Introduction**

My dear respected brothers and sisters, today's khutbah is about *leadership and responsibility in Islam*. We will reflect on how Rasulullah ﷺ prepared the youth of his time, how they became a dynamic force that changed the world, and what lessons we can learn from the Khulafa' and great leaders of this Ummah.

**Part 1: Rasulullah ﷺ and Preparing the Youth**

Last year, I discussed the Ayah where Allah describes the companions of Rasullullah ﷺ in the Holy Qur'an:

**﴿مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ﴾**

*(Muhammad is the Messenger of Allah, and those who are with him are firm against the disbelievers, merciful among themselves)* [Surah Al-Fath 48:29].

The reason that I am revisiting this topic is because I cannot stress enough that you are the future of the Ummah and you must keep in mind these excellent lessons from the holy Qur'an, so I continue with the words of Allah as He describes the greatest leader in history, Prophet Muhammad ﷺ:

**﴿فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللَّهِ لِنتَ لَهُمْ وَلَوْ كُنتَ فَظًّا غَلِيظَ الْقَلْبِ لَانفَضُّوا مِنْ حَوْلِكَ﴾**

*(It is by the mercy of Allah that you were gentle with them; had you been harsh and hard-hearted, they would have dispersed from around you)* [Surah Aal-Imran 3:159].

Along with the great Sahabah who were nurtured by Rasulullah ﷺ, he also nurtured young men like **Ali ibn Abi Talib who embraced Islam at the age of 10**, **Mus'ab ibn Umair who embraced Islam at the age of 18**, and **Usama ibn Zaid who was given the leadership of the Syria expedition (over some of the most senior Sahaba including:**

- **Abu Bakr as-Siddiq (رضي الله عنه)**
- **Umar ibn al-Khattab (رضي الله عنه)**
- **Abu Ubaydah ibn al-Jarrah (رضي الله عنه)**
- **Sa'd ibn Abi Waqqas (رضي الله عنه)**
- **Yazid ibn Abi Sufyan (رضي الله عنه)**
- **Khalid ibn al-Walid (رضي الله عنه))**

**He was only 18 years of age when he was** given the responsibility and trust.

Usama led a force of about **3,000 soldiers**, including 1,000 cavalry. He deployed scouts ahead of the campaign to gather intelligence. The expedition successfully raided Byzantine territory, marking the **first Muslim incursion into Byzantine lands**. This victory paved the way for later major expansions—the **Muslim conquest of the Levant and Egypt**, which occurred during Usama's lifetime under the Rashidun Caliphate.

These youths and others like them became leaders who carried Islam to the corners of the earth.

### Part 2: Abu Bakr – Leadership with Humility

When Rasulullah ﷺ passed away, Abu Bakr was chosen as Khalifah. He never desired leadership, but circumstances forced him. His first khutbah was full of humility:

"لقد وُكِّلتُ عليكم، ولستُ أفضلَكم. إن أحسنتُ فأعينوني، وإن أسأتُ فقوموني. الصدق أمانة، والكذب خيانة".

*"I have been appointed over you, though I am not the best among you. If I do right, help me; if I do wrong, correct me. Truthfulness is trust, and lying is betrayal."*
(Reported in Tarikh al-Tabari).

This shows that leadership in Islam is a responsibility, not a privilege.

**Part 3: Umar ibn al-Khattab – clarified that we will only gain our Honor through Islam**

Umar was known for his courage and justice. He said:

**إِنَّا كُنَّا أَذَلَّ قَوْمٍ، فَأَعَزَّنَا اللَّهُ بِالإِسْلَامِ، فَمَهْمَا نَطْلُبُ الْعِزَّةَ بِغَيْرِ مَا أَعَزَّنَا اللَّهُ بِهِ أَذَلَّنَا اللَّهُ.**

*"We were the most humiliated of people, but Allah honoured us through Islam. So whenever we seek honour through anything other than what Allah honoured us with, Allah will humiliate us."* (Reported by al-Hakim).

**Part 4: Uthman and Ali**

- **Uthman ibn Affan:** His leadership was marked by generosity, patience and forbearance. Above all, he highly valued the lives and comforts of other Muslims and worked to improve the quality of life for all around him.
- **Ali ibn Abi Talib:** Known for his exceptional bravery, knowledge, wisdom and analytical ability. He said:
  *"Ask me before you lose me."* His governance emphasized justice and learning.

**Part 5: Sa‘d ibn Abi Waqqas and the Battle of Qadisiyyah**

Sa‘d led the Muslims against the Magian Persians. When they crossed the **Dijla (Tigris) River**, the enemy, awestruck by the courage of Sa’d and his army, said: *“The demons are coming!”* But their faith made them fearless. Allama Iqbal wrote (paraphrased):

دجلہ کے پانیوں کو یاد ہے وہ دن
جب ہمارے گھوڑے اس پر تیرتے تھے

*"Oh Tigris River, remember the day when our riders (knights) crossed you (on horsebacks)."*

And with this expedition, the entirety of Persia received and embraced the salvation of Islam and transformed into staunch believers and great scholars, leaders and inventors.

Islam transformed **Khalid ibn al-Walid (رضي الله عنه)** from an enemy to one of its greatest defenders. He became known as سيف الله المسلول the drawn Sword of Allah, he was never defeated in battle, even when he fought armies that outnumbered his by 33 to 1 (such as in the battle of Mu’tah). He is regarded as one of the greatest military generals in the history of humanity. His strategies are still analysed in military academies (Including West Point in the USA) as examples of brilliance in leadership and battlefield tactics.

Islam produced **Salahuddin al-Ayyubi (Saladin),** he was **not a Caliph**, but a brilliant leader and statesman. He rose from being a general under Nur ad-Din to founding the **Ayyubid dynasty**.

- He **united fragmented Muslim dominions** in Egypt, Syria, and beyond, ending the Fatimid Caliphate in Egypt, which had previously allowed Crusaders safe passage to the Holy Land, even though, they were supposed to be the defenders of that front against invasions.
- His greatest achievement was the **Battle of Hattin (1187)**, where he decisively defeated the Crusader forces and paved the way to **liberate Jerusalem**.

- Despite the Crusaders' atrocities during their conquest, Salahuddin showed **extraordinary mercy**:
  - He spared civilians.
  - Allowed safe passage for many Crusaders to return to their European homes.
  - Even personally paid ransom for some poor captives.
- His character became a symbol of **chivalry and justice**, admired even by European historians.

Islam produced **Alp Arslan, a Seljuk Sultan** who faced the Byzantine Empire at the **Battle of Manzikert (1071)**.

- His army numbered about **15,000**, while the Byzantine forces were estimated at **50,000–70,000**.
- Through **brilliant strategy and discipline**, Alp Arslan transformed what seemed like certain defeat into a **historic victory**.
- This victory **opened Anatolia to Islam**, laying the foundation for centuries of Muslim presence in what is now Turkey.
- His leadership combined **courage, humility, and reliance on Allah**—before the battle, he wore his "kafan" burial shroud, symbolizing readiness for martyrdom.

**Part 6: Contributions of Muslims to India**

My dear students, remember throughout your career, that Islam and Muslims always made great contributions to India, our ancestors united India, we produced leaders like the great **Sher Shah Suri,** he successfully reformed governance, introduced efficient administration and the Grand Trunk Road which connected vast areas of the nation.

Islam produced **Tipu Sultan,** the very courageous and inventive leader who fought with all his resources to protect India from colonial powers. He invented the first iron cased rockets, a technology stolen after he was

martyred, and used by the British to develop the Congreve rockets which had a great influence on the development of European military technology.

Islam also produced great scientists in India, including the amazing **Al-Biruni,** he was a scholar of astronomy, mathematics, and history.

These are our ancestors, this is the quality leadership and great character that our prophet, peace and blessings upon him, mentored and nurtured, this is the model for all our educational institutions, to produce not only leaders, but also saviours of the human family.

The famous poet Al Farazdaq said:

**أُولَئِكَ آبَائي فَجِئْنِي بِمِثْلِهِمْ ... إِذَا جَمَعَتْنَا يَا جَرِيرُ المَجَامِعُ**

*"Those are my ancestors; so bring me their like, when we are brought together, O Jarir, in the great assemblies."*

**أقول قولي هذا وأستغفر الله لي ولكم فاستغفروه إنه هو الغفور الرحيم.**

**(جلسة الاستراحة)**

**********

**<u>الخطبة الثانية:</u>**

الحمد لله، والصلاة والسلام على رسول الله وعلى آله وصحبه ومن والاه – أما بعد – فأوصيكم ونفسي بتقوى الله عز وجل.

**Part 7: Timeless Principles**

- **The prophet** ﷺ was asked by a desert Arab about the final hour, one of the signs of the hour, answered the prophet ﷺ was**:**

إِذَا وُسِّدَ الأَمْرُ إِلَى غَيْرِ أَهْلِهِ فَانتَظِرِ السَّاعَةَ

*"When authority is given to those unworthy of it, await the Hour."*
(Sahih al-Bukhari).
This hadith stresses the importance of choosing the most qualified leader, not just the one who serves your personal interest, the unqualified leader is little more than a recipe for disaster for society.

- **Imam Malik, the famous Muhaddith and jurist said:**
  *"This Ummah will only be reformed by what reformed its first generation."*
  This warning from Imam Malik is a warning that every generation must keep in mind and act on always, that our reform and improvement and the rise of our Ummah is to go back to the Qur'an and Sunnah.

- **Ibn Khaldun, the famous sociologist and political scientist said:**
  Nations that fail to learn from the past, have no future. (meaning, those who do not correct their course)
  Iqbal echoed this:

  سبق پھر پڑھ صداقت کا، عدالت کا، شجاعت کا
  لیا جائے گا تجھ سے کام دنیا کی امامت کا

  *"Learn again the lesson of truthfulness, justice, and courage;*
  *You will be called upon to lead the world.*
  With this third principle, we learn how to maintain and preserve the first two; honest, integrity and courage knowing that our primary accountability is to Allah, Ta'ala.

**Part 8: Contemporary Relevance**

This New College/University has produced thousands of scholars, leaders and excellent administrators, including my dear friend, the chairman of this institution, Marhoum Auditor Khalilullah. Thousands of New College graduates are serving society throughout the nation. But remember

leadership is not about titles; it is about service, responsibility and always acting justly.

**Conclusion**

Let us take lessons from the Sahabah and our great scholars. Leadership is Amanah (trust). We must lead with integrity, courage, and mercy.

**اللهم أصلح لنا ديننا الذي هو عصمة أمرنا، وأصلح لنا دنيانا التي فيها معاشنا، وأصلح لنا آخرتنا التي إليها معادنا، واجعل الحياة زيادة لنا في كل خير، واجعل الموت راحة لنا من كل شر.**

**اللَّهُمَّ اغفرْ لنا ولآبائنا وأمهاتنا وللمسلمين والمسلمات، والمؤمنين والمؤمنات، الأحياء منهم والأموات، إنك سميعٌ قريبٌ مجيبُ الدعوات.**
**اللَّهُمَّ انصرْ إخوانَنا المستضعفين في غزة وفلسطين، اللهم اصلح بين إخواننا في سوريا والسودان والصومال، اللهم فرِّج كربَهم، واشفِ جرحاهم، وارحم شهداءهم، واحفظهم بحفظك، واجعل لهم من كل ضيقٍ مخرجًا ومن كل همٍّ فرجًا.**
**اللَّهُمَّ احفظْ بلادَ الهند وأهل الهند من الفتن ما ظهر منها وما بطن، واجعلها دار أمنٍ وإيمانٍ وسلامةٍ وسلام، وارزق أهلها العيش الكريم والرزق الواسع، ووفقهم لما تحب وترضى.**
**اللَّهُمَّ آتنا في الدنيا حسنةً، وفي الآخرة حسنةً، وقِنا عذابَ النار.**
**عباد الله: ﴿إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا﴾ سورة الأحزاب، الآية 56.**

**اللَّهُمَّ صلِّ وسلِّم وبارك على عبدك ورسولك محمد، وعلى آله وصحبه أجمعين.**

**﴿وَأَقِمِ الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ تَنْهَىٰ عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَلَذِكْرُ اللَّهِ أَكْبَرُ وَاللَّهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ﴾ سورة العنكبوت، الآية 45.**

## بسم الله الرحمن الرحيم

**குத்பா தலைப்பு: இஸ்லாத்தில் தலைமைத்துவமும், பொறுப்புணர்வும் – நபித்தோழர்களிடம் இருந்து அடைந்த படிப்பினைகள்.**

**الحمد لله، نحمده ونستعينه ونستغفره، ونعوذ بالله من شرور أنفسنا ومن سيئات أعمالنا، من يهده الله فلا مضل له، ومن يضلل فلا هادي له. وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له، وأشهد أن محمداً عبده ورسوله.**

**يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ**

**أما بعد:**

எனது அருமைச் சகோதர சகோதரிகளே, இன்றைய குத்பா பேருரையானது இஸ்லாத்தில் தலைமைத்துவம் மற்றும் பொறுப்புணர்வு பற்றியதாகும். ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்கள் காலத்து இளைஞர்களை எவ்வாறு தயார்படுத்தினார்கள், அவர்கள் எவ்வாறு உலகை மாற்றியமைத்த ஒரு உந்துசக்தியாக மாறினார்கள், மேலும் குலஃபாக்கள் மற்றும் இந்த சமுதாயத்தின் சிறந்த தலைவர்களிடமிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம் என்பதைப் பற்றி நாம் சிந்திக்கவுள்ளோம்.

பகுதி 1:

**ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் இளைஞர்களைத் தயார்படுத்துதலும்**

கடந்த ஆண்டு, ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்களைப் பற்றி அல்லாஹ் விவரிக்கும் திருக்குர்ஆனின் வசனத்தை நான் விவாதித்தேன்:

**" مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُم"**

**(முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார்; அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பவர்களிடத்தில் கண்டிப்பானவர்கள், தங்களுக்கிடையே இரக்கமுடையவர்கள்) [அல்குர்ஆன்** 48:29].

நான் இந்தத் தலைப்பை மீண்டும் நினைவுபடுத்துவதற்குக் காரணம், நீங்கள்தான் இந்த சமுதாயத்தின் (உம்மத்) எதிர்காலம் என்பதையும், திருக்குர்ஆனின் இந்தச் சிறந்த பாடங்களை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதற்காகவே ஆகும். எனவே வரலாற்றின் மிகப்ச்சிறந்த தலைவரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் விவரிக்கும் வார்த்தைகளுடன் தொடர்கிறேன்:

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللَّهِ لِنتَ لَهُمْ وَلَوْ كُنتَ فَظًّا غَلِيظَ الْقَلْبِ لَانفَضُّوا مِنْ حَوْلِكَ

**(அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கிறீர்; (சொல்லில்) கடுகடுப்பானவராகவும், கடின உள்ளம் கொண்டவராகவும் நீர் இருந்திருப்பீரானால், அவர்கள் உம்மை விட்டுப் பிரிந்து சென்றிருப்பார்கள்) [அல்குர்ஆன்** 3:159].

ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட சிறந்த சஹாபாக்களுடன்,

10 வயதில் இஸ்லாத்தை ஏற்ற அலி இப்னு அபி தாலிப்,

18 வயதில் இஸ்லாத்தை ஏற்ற முஸ்அப் இப்னு உமைர்,

சிரியா போர்ப்படைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு வழங்கப்பட்ட உஸாமா இப்னு ஸைத் போன்ற இளைஞர்களையும் அவர் உருவாக்கினார். (உஸாமாவுக்குத் தலைமை வழங்கப்பட்ட படையில் மூத்த சஹாபாக்களும் அவர்களில் இருந்தனர்):

- **அபூபக்கர் அஸ்–சித்திக் (ரலி)**
- **உமர் இப்னு அல்–கத்தாப் (ரலி)**
- **அபூ உபைதா இப்னு அல்–ஜர்ராஹ் (ரலி)**
- **ஸஃத் இப்னு அபி வக்காஸ் (ரலி)**
- **யசீத் இப்னு அபி சுஃப்யான் (ரலி)**
- **காலித் இப்னு அல்–வலீத் (ரலி)**

**இந்தப் பொறுப்பும் நம்பிக்கையும் அவருக்கு வழங்கப்பட்டபோது அவருக்கு வயது 18 மட்டுமே.**

உஸாமா, 1,000 குதிரைப்படை வீரர்கள் உட்பட சுமார் 3,000 வீரர்கள் கொண்ட படைக்குத் தலைமை தாங்கினார். உளவுத் தகவல்களைச் சேகரிக்க அவர் போருக்கு முன்னதாகவே உளவு பார்க்க சிறு படைகளை அனுப்பினார். இந்தத் படையெடுப்பு (Byzantine lands) பைசண்டைன் பிரதேசத்தை வெற்றிகரமாகத் தாக்கியது, இது பைசண்டைன் (Byzantine lands) நிலங்களுக்குள் முஸ்லிம்களின் முதல் ஊடுருவலைக் குறித்தது. இந்த வெற்றி பிற்கால முக்கிய விரிவாக்கங்களுக்கு – அதாவது உஸாமாவின் வாழ்நாளிலேயே ராஷிதுன் கிலாஃபத்தின் கீழ் நிகழ்ந்த லெவண்ட் (Levant - **தற்போதைய சிரியா, ஜோர்டான், லெபனான், பாலஸ்தீனம் உள்ளடக்கிய பகுதி)** மற்றும் எகிப்தின் முஸ்லிம் வெற்றிகளுக்கு வழி வகுத்தது.

**இந்த இளைஞர்களும் அவர்களைப் போன்றவர்களும் இஸ்லாத்தை உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்ற தலைவர்களாக மாறினர்.**

பகுதி 2:

**அபூபக்கர் (ரலி) – பணிவுடன் கூடிய தலைமைத்துவம்**

ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மறைந்தபோது, அபூபக்கர் (ரலி) கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஒருபோதும் தலைமைத்துவத்தை விரும்பவில்லை, ஆனால் சூழ்நிலைகள் அவரை நிர்பந்தித்தன. அவருடைய முதல் குத்பா (பேருரை) பணிவு நிறைந்ததாக இருந்தது:

**"நான் உங்கள் மீது தலைவராக நியமிக்கப்பட்டுள்ளேன், ஆனால் நான் உங்களில் சிறந்தவன் அல்ல. நான் சரியாகச் செய்தால் எனக்கு உதவுங்கள்; நான் தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள். வாய்மை என்பது அமானிதம் (நம்பிக்கை), பொய் என்பது துரோகம்."**

**(நூல்: தாரிக் அல்–தபரி).**

இஸ்லாத்தில் தலைமை என்பது ஒரு பொறுப்பு, அது ஒரு சலுகை அல்ல என்பதை இது காட்டுகிறது.

பகுதி 3:

**உமர் இப்னு அல்–கத்தாப் (ரலி) – இஸ்லாத்தின் மூலம் மட்டுமே நாம் கண்ணியம் பெறுவோம்**

உமர் (ரலி) தனது தைரியத்திற்கும் நீதிக்கும் பெயர் பெற்றவர். அவர் கூறினார்:

**"நாம் மிகவும் இழிவான மக்களாக இருந்தோம், ஆனால் அல்லாஹ் இஸ்லாத்தின் மூலம் நம்மைக் கண்ணியப்படுத்தினான். எனவே அல்லாஹ் நம்மைக் கண்ணியப்படுத்தியதைத் தவிர வேறு எதன் மூலமாவது நாம் கண்ணியத்தைத் தேடினால், அல்லாஹ் நம்மை இழிவுபடுத்துவான்."**

**(நூல்: அல்–ஹாகிம்).**

பகுதி 4:

**உஸ்மான் இப்னு அஃப்பான் (ரலி):** அவரது தலைமைத்துவம் தாராள மனப்பான்மை, பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையால் குறிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் மற்ற முஸ்லிம்களின் உயிர்களையும் வசதிகளையும் பெரிதும் மதித்தார் மற்றும் தன்னைச் சுற்றியுள்ள அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த உழைத்தார்.

**அலி இப்னு அபி தாலிப் (ரலி):** அவரது அசாத்தியமான துணிச்சல், அறிவு, ஞானம் மற்றும் பகுப்பாய்வுத் திறனுக்காக அறியப்பட்டவர். அவர் கூறினார்:

**"என்னை இழப்பதற்கு முன் என்னிடம் கேளுங்கள்." அவரது ஆட்சி நீதியையும் கற்றலையும் வலியுறுத்தியது.**

பகுதி 5:

**ஸஃத் இப்னு அபி வக்காஸ் மற்றும் காதிஸியா யுத்தம்**

நெருப்பு வணங்கிகளான பாரசீகர்களுக்கு எதிராக ஸஃத் (ரலி) முஸ்லிம்களை வழிநடத்தினார். அவர்கள் திஜ்லா (Dijla) நதியைக் கடந்தபோது, ஸஃத் மற்றும் அவரது படையினரின் துணிச்சலைக் கண்டு வியந்த எதிரிகள், "பேய்கள் வருகின்றன!" என்று கூறினர். ஆனால் அவர்களின் நம்பிக்கை அவர்களை அச்சமற்றவர்களாக மாற்றியது. அல்லாமா இக்பால் எழுதியது போல:

**"ஓ திஜ்லா நதியே, எங்கள் குதிரை வீரர்கள், உன் மீது குதிரைகளை ஓட்டினார், அந்த நாள் உனக்கு நாபகம் உள்ளதா."**

இந்த வெற்றியின் மூலம், பாரசீகம் முழுவதும் இஸ்லாத்தை தழுவியது, மேலும் அவர்கள் உறுதியான நம்பிக்கையாளர்களாகவும், சிறந்த அறிஞர்களாகவும், தலைவர்களாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும் மாறினர்.

முன்னதாகவே காலித் இப்னு அல்-வலீத் (ரலி) அவர்களை இஸ்லாத்தின் ஒரு எதிரியாக இருந்தார். பிறகு இஸ்லாத்தின் மிகப் பெரிய பாதுகாவலர்களில் ஒருவராக மாறினார். அவர் **"சைஃபுல்லாஹில் மஸ்லூல்" (அல்லாஹ்வின் போர் வாள்)** என்று அழைக்கப்பட்டார்; அவர் போரில் ஒருபோதும் தோற்கடிக்கப்படவில்லை, முஃதா போரில் தனது படையை விட 33 மடங்கு அதிகமான எண்ணிக்கையிலான படைகளை எதிர்த்துப் போரிட்டபோதும் அவர் தோற்கவில்லை. மனித வரலாற்றில் சிறந்த இராணுவத் தளபதிகளில் ஒருவராக அவர் கருதப்படுகிறார். தலைமைத்துவம் மற்றும் போர்க்கள உத்திகளில் புத்திசாலித்தனத்திற்கான எடுத்துக்காட்டுகளாக (அமெரிக்காவில் உள்ள வெஸ்ட் பாயிண்ட் உட்பட) இராணுவக் கல்லூரிகளில் அவரது உத்திகள் இன்னும் ஆய்வு செய்யப்படுகின்றன.

இஸ்லாம் சலாகுத்தீன் அல்-அய்யூபியை உருவாக்கியது, அவர் கலீஃபாவாக இல்லாவிட்டாலும், ஒரு சிறந்த தலைவராகவும் அரசியல்வாதியாகவும் இருந்தார். நூர் அத்-தீனின் கீழ் ஒரு தளபதியாக இருந்து அய்யூபித் வம்சத்தை நிறுவினார். எகிப்து, சிரியா மற்றும் பிற இடங்களில் சிதறிக் கிடந்த முஸ்லிம் ஆதிக்கங்களை ஒன்றிணைத்தார். ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான பாதுகாப்பாளர்களாக இருக்க வேண்டிய ஃபாத்திமித் கிலாஃபத், சிலுவைப்போர் படையினருக்குப் புனித பூமிக்குச் செல்ல பாதுகாப்பான பாதையை அனுமதித்தது; எகிப்தில் அவர்களின் ஆட்சியை சலாகுத்தீன் முடிவுக்குக் கொண்டுவந்தார்.

அவரது மிகப் பெரிய சாதனை ஹத்தின் போர் (1187) ஆகும், அங்கு அவர் சிலுவைப்போர் படைகளைத் தீர்க்கமாகத் தோற்கடித்து ஜெருசலேத்தை மீட்பதற்கான வழியை வகுத்தார். சிலுவைப்போர் படையினர் தங்கள் ஆக்கிரமிப்பின் போது செய்த அட்டூழியங்கள் இருந்தபோதிலும், சலாகுத்தீன் பழிக்குப் பழி வாங்காமல் மிக உயர்ந்த கருணையையும் கண்ணியத்தையும் வெளிப்படுத்தினார்.

- அவர் பொதுமக்களைக் காப்பாற்றினார்.
- பல சிலுவைப்போர் படையினர் தங்கள் ஐரோப்பிய வீடுகளுக்குத் திரும்பப் பாதுகாப்பான வழியை அனுமதித்தார்.
- சில ஏழைக் கைதிகளுக்காகத் தனிப்பட்ட முறையில் பணயத்தொகையைச் செலுத்தினார். அவரது குணம் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களாலும் போற்றப்படும் வீரம் மற்றும் நீதியின் அடையாளமாக அது மாறியது.

மன்சிகெர்ட் போரில் (1071) பைசாந்தியப் பேரரசை எதிர்கொண்ட செல்ஜுக் சுல்தான் அல்ப் அர்ஸ்லானை இஸ்லாம் உருவாக்கியது. அவரது படை சுமார் 15,000 பேர், அதே நேரத்தில் பைசாந்தியப் படைகள் 50,000-70,000 என மதிப்பிடப்பட்டது. சிறந்த வியூகம் மற்றும் ஒழுக்கத்தின் மூலம், அல்ப் அர்ஸ்லான் உறுதியான தோல்வி போல் தோன்றியதை வரலாற்று வெற்றியாக மாற்றினார். இந்த வெற்றி அனடோலியாவை (இன்றைய துருக்கி) இஸ்லாத்தின் பக்கம் திரும்பியது, மேலும் அங்கு பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் இருப்புக்கு அடித்தளம் அமைத்தது. அவரது தலைமை தைரியம், பணிவு மற்றும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை ஆகியவற்றை ஒருங்கிணைத்தது – போருக்கு முன், அவர் தனது "கஃபன்" (பிரேதத் துணி) அணிந்திருந்தார், இது ஷஹாதத்திற்கு (தியாகத்திற்கு) அவர் தயாராக இருப்பதைக் குறிக்கிறது.

பகுதி 6:

**இந்தியாவுக்கு முஸ்லிம்களின் பங்களிப்புகள்:**

எனது அன்பான மாணவர்களே, உங்கள் வாழ்நாள் முழுவதும் நினைவில் கொள்ளுங்கள், இஸ்லாமும் முஸ்லிம்களும் எப்போதும் இந்தியாவுக்குப் பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளனர், நம் முன்னோர்கள் இந்தியாவை ஒன்றிணைத்தனர். ஷெர் ஷா சூரி போன்ற சிறந்த தலைவர்களை இந்தியா தந்துள்ளது, அவர் நிர்வாகத்தைச் வெற்றிகரமாகச் சீர்திருத்தினார், திறமையான நிர்வாகத்தை அறிமுகப்படுத்தினார் மற்றும் தேசத்தின் பரந்த பகுதிகளை இணைக்கும் நெடுதூரச் சாலையை (Grand Trunk Road) அமைத்தார்.

**திப்பு சுல்தான்** : காலனித்துவ சக்திகளிடமிருந்து இந்தியாவைப் பாதுகாக்கத் தனது அனைத்து வளங்களுடனும் போராடிய மிகவும் தைரியமான மற்றும் கண்டுபிடிப்புத் திறன் கொண்ட தலைவரான திப்பு சுல்தானை இஸ்லாம் உருவாக்கியது. அவர் முதல் இரும்பு உறை கொண்ட ராக்கெட்டுகளைக் கண்டுபிடித்தார். அவர் ஷஹீதாக்கப்பட்ட (வீரமரணம் அடைந்த) பிறகு இந்தத் தொழில்நுட்பம் திருடப்பட்டது. இது காங்கிரீவ் (Congreve) ராக்கெட்டுகளை உருவாக்கப் ஆங்கிலேயர்களால் பயன்படுத்தப்பட்டது, இது ஐரோப்பிய இராணுவத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

வானியல், கணிதம் மற்றும் வரலாற்றில் அறிஞராகத் திகழ்ந்த அற்புதமான அல்–பிருனி உட்படப் பெரும் விஞ்ஞானிகளை இஸ்லாம் இந்தியாவிலும் உருவாக்கியது.

இவர்களே நம் முன்னோர்கள், இதுதான் நம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பயிற்றுவித்து வளர்த்தெடுத்த தரமான தலைமை மற்றும் சிறந்த குணம். இதுவே நமது அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் முன்மாதிரியாகும் – தலைவர்களை மட்டுமல்ல, மனிதக் குடும்பத்தின் பாதுகாவலர்களையும் உருவாக்குவதே இதன் நோக்கம்.

இதைச் சொல்லி, நான் எனக்காகவும் உங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன், நீங்களும் அவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள், நிச்சயமாக அவன் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையவனாகவும் இருக்கிறான்.

******

**இரண்டாவது குத்பா:**

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே, அல்லாஹ்வின் தூதர் மீதும், அவரது குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. மேலும், நான் எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்வை அஞ்சுமாறு (தக்வா செய்யுமாறு) அறிவுறுத்துகிறேன்.

**பகுதி 7: காலத்தால் அழியாத கொள்கைகள்**

ஒரு கிராமப்புற அரபி, இறைத்தூதரிடம் மறுமை நாளைப் பற்றிக் கேட்டார். மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாக இறைத்தூதர் (ஸல்) பதிலளித்தார்:

"தகுதியற்றவர்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும்போது, மறுமை நாளை எதிர்பாருங்கள்." (ஸஹீஹ் அல்–புகாரி).

இந்த ஹதீஸ் மிகவும் தகுதியான தலைவரைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது, உங்கள் தனிப்பட்ட நலனுக்குச் சேவை செய்பவரை மட்டுமல்ல. தகுதியற்ற தலைவர் சமூகத்திற்குப் பேரழிவை ஏற்படுத்துவதைத் தவிர வேறில்லை.

பிரபல முஹத்திஸ் மற்றும் சட்ட நிபுணரான இமாம் மாலிக் கூறினார்: **"இந்தச் சமுதாயத்தின் (உம்மத்) ஆரம்பத் தலைமுறையை எது சீர்திருத்தியதோ, அதுவே இந்தச் சமுதாயத்தையும் சீர்திருத்தும்."**

இமாம் மாலிக்கின் இந்த எச்சரிக்கை ஒவ்வொரு தலைமுறையினரும் மனதில் கொண்டு எப்போதும் செயல்பட வேண்டிய ஒன்றாகும்; நமது சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றம் மற்றும் நமது உம்மத்தின் எழுச்சி குர்ஆன் மற்றும் சுன்னாவிற்குத் திரும்புவதில்தான் உள்ளது.

பிரபல சமூகவியலாளர் மற்றும் அரசியல் விஞ்ஞானியான இப்னு கல்தூன் கூறினார்: "கடந்த காலத்திலிருந்து பாடம் கற்கத் தவறிய தேசங்களுக்கு எதிர்காலம் இல்லை." (அதாவது, தங்கள் போக்கைச் சரிசெய்யாதவர்கள்).

இக்பால் இதை எதிரொலித்தார்:

**"வாய்மை, நீதி மற்றும் துணிச்சல் ஆகியவற்றின் பாடத்தை மீண்டும் கற்றுக்கொள்ளுங்கள்; உலகத்தை வழிநடத்த நீங்கள் அழைக்கப்படுவீர்கள்."**

இந்த மூன்றாவது கொள்கையின் மூலம், முதல் இரண்டையும் எவ்வாறு பராமரிப்பது மற்றும் பாதுகாப்பது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்; நேர்மை, கண்ணியம் மற்றும் துணிச்சல் ஆகியவை, நமது முதன்மையான பொறுப்பு அல்லாஹ்விடமே உள்ளது என்பதை அறிந்துகொள்வதன் மூலம் கிடைக்கும்.

## பகுதி 8: சமகாலத் தொடர்பு

இந்த நியூ காலேஜ் பல்கலைக்கழகம் ஆயிரக்கணக்கான அறிஞர்கள், தலைவர்கள் மற்றும் சிறந்த நிர்வாகிகளை உருவாக்கியுள்ளது, இதில் எனது அன்பான நண்பரும், இந்த நிறுவனத்தின் தலைவருமான மர்ஹூம் ஆடிட்டர் கலீலுல்லாஹ் அவர்களும் அடங்குவர். அவர்களை நான் இந்த தருணத்தில் நியாபகம் கொள்கிறேன். ஆயிரக்கணக்கான நியூ காலேஜ் பட்டதாரிகள் நாடு முழுவதும் சமூகத்திற்குச் சேவை செய்து வருகின்றனர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், தலைமை என்பது பதவிகளைப் பற்றியது அல்ல; இது சேவை, பொறுப்பு மற்றும் எப்போதும் நீதியுடன் செயல்படுவது பற்றியதாகும்.

## முடிவுரை

சஹாபாக்கள் மற்றும் நமது சிறந்த அறிஞர்களிடமிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வோம். தலைமைத்துவம் என்பது அமானிதம் (நம்பிக்கைப் பொறுப்பு). நாம் நேர்மை, துணிச்சல் மற்றும் கருணையுடன் வழிநடத்த வேண்டும்.

"யா அல்லாஹ்! எங்கள் காரியங்களுக்குப் பாதுகாப்பான எங்கள் மார்க்கத்தை எங்களுக்குச் சீர்படுத்துவாயாக. எங்கள் வாழ்வாதாரம் அமைந்துள்ள எங்கள் இம்மை வாழ்வைச் சீர்படுத்துவாயாக. நாங்கள் மீளவிருக்கும் எங்கள் மறுமை வாழ்வைச் சீர்படுத்துவாயாக. நன்மைகளை அதிகப்படுத்திக் கொள்ளும் களமாக எங்கள் வாழ்வை ஆக்குவாயாக. தீமைகளிலிருந்து ஓய்வு பெறும் இடமாக எங்கள் மரணத்தை ஆக்குவாயாக."

"யா அல்லாஹ்! எங்களுக்கும், எங்கள் பெற்றோருக்கும், உயிருடன் இருப்பவர்கள் மற்றும் இறந்தவர்கள் உட்பட அனைத்து முஸ்லிமான ஆண்களுக்கும் பெண்களுக்கும், இறைநம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் மன்னிப்பளிப்பாயாக. நிச்சயமாக நீ செவியேற்பவனாகவும், அருகிலிருப்பவனாகவும், பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பவனாகவும் இருக்கிறாய்."

"யா அல்லாஹ்! காசா மற்றும் பாலஸ்தீனத்தில் பலவீனப்படுத்தப்பட்ட எங்கள் சகோதரர்களுக்கு உதவி செய்வாயாக. சிரியா, சூடான் மற்றும் சோமாலியாவில் உள்ள எங்கள் சகோதரர்களுக்கு இடையே சீர்திருத்தத்தை ஏற்படுத்துவாயாக. யா அல்லாஹ்! அவர்களின் துன்பங்களை நீக்குவாயாக, காயமடைந்தவர்களைக் குணப்படுத்துவாயாக, அவர்களின் தியாகிகளுக்கு (ஷுஹதாக்களுக்கு) கருணை காட்டுவாயாக, உன்னுடைய பாதுகாப்பைக் கொண்டு அவர்களைப் பாதுகாப்பாயாக. ஒவ்வொரு நெருக்கடியிலிருந்தும் அவர்களுக்கு ஒரு வெளியேறும் வழியையும், ஒவ்வொரு கவலையிலிருந்தும் நிவாரணத்தையும் அளிப்பாயாக."

"யா அல்லாஹ்! இந்திய நாட்டையும் இந்திய மக்களையும் வெளிப்படையான மற்றும் மறைமுகமான சோதனைகளிலிருந்து பாதுகாப்பாயாக. இதை அமைதி, ஈமான், பாதுகாப்பு மற்றும் சாந்தி நிறைந்த இடமாக ஆக்குவாயாக. இதன் மக்களுக்குக் கண்ணியமான வாழ்க்கையையும், பரந்த வாழ்வாதாரத்தையும் வழங்குவாயாக. நீ விரும்புவதற்கும் உவப்பதற்கும் அவர்களுக்கு உதவி செய்வாயாக."

"யா அல்லாஹ்! எங்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மையைத் தருவாயாக, நரக நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக."

**அல்லாஹ்வின் அடியார்களே: "நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். ஈமான் கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்துச் சொல்லி, அவர் மீது சலாம் சொல்லுங்கள்."**

**(சூரா அல்–அஹ்ஸாப், வசனம் 56).**

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதருமான முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவரது குடும்பத்தார் மற்றும் தோழர்கள் அனைவர் மீதும் உனது அருளையும் சாந்தியையும் பொழிவாயாக.

**மேலும் தொழுகையை நிலைநாட்டுங்கள்; நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கும்; அல்லாஹ்வை நினைவுகூருவது மிகப் பெரியதாகும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிவான்.**

**(சூரா அல்–அன்கபூத், வசனம் 45).**

**********



# ADMISSION OPEN 2026-2027

## GRADE PRE KG –XI

Excellence in Education, Character and Service

# AL QALAM INTERNATIONAL SCHOOL


Affiliated CBSE New Delhi, Affiliation No: 1931228 | School Code: 56183
Ramnad - Rameswaram Highway, Perungulam, Ramanathapuram District - 623 536

Mob: +91 88706 89861 | Tel:+91 4567 299 438
E-mail: alqalamschoolpgm@gmail.com | Web: aqis.qalamschools.org


**REGISTER NOW**
https://www.alqalampgm.app/online_admission

aqis.qalamschools.org

QALAM GROUP OF INSTITUTION

www.qalamschools.org

AUSTRALIAN INTERNATIONAL ISLAMIC COLLEGE

https://aiic.qld.edu.au/

## QALAM GROUP OF INSTITUTION



AL QALAM NURSERY & PRIMARY SCHOOL



ALEEF NURSERY & PRIMARY SCHOOL



QALAM INTERNATIONAL MATRIC.HR.SEC.SCHOOL

## AUSTRALIAN INTERNATIONAL ISLAMIC COLLEGE






DURACK | BRISBANE | DARWIN | LOGAN | GOLD COST